பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 03 வியாழக்கிழமை 20.10.2022 கதிர் 347

### இது ரகசியம் அல்ல!

'எது நடந்தாலும் நன்மைக்கே என மகிழ்ச்சியுடன் ஏற்பேன்' - என்றார் ஹென்றி போர்ட்.

நாடாளுமன்றத்தில் இன்று சர்ச்சைக்குரிய 22 ஆவது அரசமைப்புதிருத்தச்சட்டம்வருகிறது. இன்றும் நாளையும் விவாதம். நாளை முடிவில் ☞2

## இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவு

# பொருளாதார நெருக்கடிக்கு முடிவு கட்ட மிகவும் பொருத்தமான தலைவர் ரணில்



## டொனால்ட் லூ நேற்று நேரில் பாராட்டு

கடன் மறுசீரமைப்பு தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகளில் இலங்கைக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும்.

- இவ்வாறு அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியங்களுக்கான உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த போதே டொனால்ட் லூ இதனைக் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பு நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் மற்றும் அரசியல் மற்றும் பொருளாதார ☞11

# நாட்டை மீட்டெடுக்கக் கடினமான தீர்மானம்; ஏழை மக்களிடமும் வரி அறவிடும் நிலைமை

## விசேட உரையில் ஜனாதிபதி கவலையுடன் தெரிவிப்பு

**"நாட்டின் தற்போதைய நிலைமையில் சர்வதேச நாணய நிதியம் கூறுவதைக் கேட்க வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம். இதனால் ஏழை மக்களிடமும் பாரபட்சமின்றி வரி அறவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்."**

**- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.** ☞11



## யாழ் இளைஞரின் மரணத்தில் மர்மம்

யாழ்ப்பாணம் - கரவெட்டியை சேர்ந்த இளைஞர் ஒருவர் செவ்வாய்க்கிழமை மர்மமான முறையில் உயிரிழந்தார். நீர்வேலி பகுதியில் மேசன் வேலையில் ஈடுபட்டு வந்த விஜயபாகு நிதஷ்ர்ன் எனும் ☞11

## 6 கடற் படையினருடன் காணாமல் போன படகு ஒரு மாதத்தின் பின் வந்து சேர்ந்தது

ஆறு கடற்படையினருடன் ஒரு மாதத்துக்கு முன்னர் காணாமல் போனதாகக் கூறப்பட்ட கடற்படை படகு பாணம முகாமுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என கடற்படை தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 16ஆம் திகதி கடலில் ரோந்து பணிகளில் ஈடுபட்டிருந்த போது இந்தப் படகின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக படகுடன் தொடர்புகொள்ள முடியாத ☞11



## வவுனியாவில் கவனவீர்ப்பு




பயங்கரவாத தடைச் சட்டத்தை உடன் நீக்குமாறு கோரி வவுனியா பழைய பஸ் நிலைய முன்றிலில் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியினரினால் ☞12

## ஆறு உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைக்க முடிவு

கோதுமை மா உட்பட ஆறு உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்க லங்கா சதொச தீர்மானித்துள்ளது. இந்த புதிய விலை திருத்தம் நேற்று ☞11

## கோட்டாவுக்கு அழைப்பாணை

மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இருவர் கடத்தப்பட்டமை தொடர்பான வழக்கில் பிரதிவாதியாக ☞11

## வயோதிபர் மீது வாள்வெட்டு ஊரிக்காட்டில் ஒருவர் கைது

வல்வெட்டித்துறை - ஊரிக்காடு, நாவலடி பகுதியில் உள்ள வீடொன்றினுள் நேற்று அதிகாலை ☞12

## 2 கோடி ரூபா கொக்கேயினுடன் 6 பேர் மன்னார் பகுதியில் கைது!

சுமார் 2 கோடி ரூபாய் பெறுமதியான கொக்கேயின் போதைப் பொருளுடன் மன்னாரை சேர்ந்த நபர் உள்ளடங்கலாக 6 சந்தேக நபர்களை மன்னார் ☞12

## நிமலராஜனின் நினைவேந்தல் நேற்று யாழ் ஊடக மையத்தில்!



யாழில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 22 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று புதன்கிழமை.யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் , ஊடக அமையத்தில் இடம்பெற்றது.

மலர்மாலையை மூத்த ஊடகவியலாளர்களான கு.செல்வக்குமார் மற்றும் த.வினோஜித் ஆகியோர் திருவுருவப்படத்திற்கு அணிவித்தனர். அதனை தொடர்ந்து, குரலற்றவர்களின் குரல் ☞12

## பொன்னியின் செல்வன் படம் பார்த்த மஹிந்தர்!



மணிரத்தினத்தின் 'பொன்னியின் செல்வன்' திரைப்படத்தை நேற்று மாலை கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள திரையரங்கு ஒன்றுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தமது துணைவியார் மற்றும் தமது நண்பர்களுடன் சென்று பார்த்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வன்புணர்வுக்காக 2 பொலிஸாருக்கு 10 வருடச் சிறை

பெண் ஒருவரை வன்புணர்வுக்கு உட்படுத்தினர் என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்த புறக்கோட்டை பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவரை குற்றவாளிகளாக இனங்கண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெதிகே, அவர்களுக்கு தலா 10 வருடங்கள் கடூழிய சிறைதண்டனை விதித்து, நேற்றுத்தீர்ப்பளித்தார்.

2015 ஆம் ஆண்டு, பெண் ஒருவரை சிறையில் அடைத்து பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினர் என ஐந்து குற்றச்சாட்டுகளின் கீழ், பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

இது தொடர்பிலான நீண்ட வழக்கு விசாரணையில், பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரச தரப்பு நிரூபிக்கப்பட்டுள்ளன அறிவித்த நீதிபதி மேற்குறிப்பிட்ட தீர்ப்பை வழங்கினார்.

## இனி இது .....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கெடுப்பு.

மூன்றில் இரண்டு பங்கு எம்பிக்களின் - அதாவது 150 நாடாளுமன்ற உறுப்பினர்களின் - ஆதரவு கிட்டினால் மட்டுமே இந்தச் சட்ட மூலம் நிறைவேறும்.

இந்தச் சட்ட மூல விடயத்தில் எது நடந்தாலும் நன்மைக்கே என்ற மகிழ்ச்சியுடன் அதை அணுகும் - எதிர்கொள்ளும் - நிலையில் இருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டோர் பொதுத் தேர்தலில் நிற்க முடியாது என்ற சட்டக் கட்டுப்பாட்டை மீளவும் கொண்டு வருகிறது இந்தச் சட்டமூலம். இது பஸில் ராஜபக்ஷவை இலக்காகக் கொண்ட கபடத் திட்டம், அப்படி தனி மனிதர்களை இலக்கு வைக்கும் சட்ட ஏற்பாட்டை ஆதரிக்க முடியாது என்பது ஆளும் பொதுஜன பெரமுனவின் பஸில் தரப்பு அணி எம்.பிக்களின் ஒரே நிலைப்பாடு; பிடிவாதம்.

நேற்று நாடாளுமன்றக் கட்டட அலுவலகத்தில் பிரதமர் தலைமையில், மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நடைபெற்ற அரசுத் தரப்பு எம்பிக்களின் கூட்டத்தில் இந்தச் சட்டத்தை ஆதரிக்க முடியாது எனப் பலர் ஆக்கிரோஷமாகக் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

இந்த அரசமைப்பு திருத்தத்தின் மீது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மனசாட்சியின் படி வாக்களிக்கலாம் என்ற முடிவு நேற்று ஆளும் கட்சி எம்.பிக்கள் கூட்டத்தில் எட்ப்பட்டதாகத் தெரிகிறது.

ஆளும் தரப்பில் பஸில் விசுவாசிகளுடன் சேர்ந்து அறுபது எம்.பிக்கள் வரை இந்தச் சட்ட மூலத்திற்கு எதிராக வாக்களிப்பர் எனக் கூறப்பட்டது

இந்த அறுபது பேர் போக, எஞ்சிய 165 எம்.பிக்களில் குறைந்தது 150 எம்.பிக்களின் ஆதரவை ரணில் - தினேஷ் குணவர்த்தனா அரசினால் எட்ட முடியுமா என்பது பெரும் கேள்விக்குறியே.

ஐக்கிய மக்கள் சக்தி, விமல் வீரவன்ஸ அணி, அனுரா பிரியதர்ஷன யாப்பா குறூப், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. உட்பட முழு எதிரணியின் ஆதரவும் இவ்விடயத்தில் அரசுக்குக் கிட்டுமானால் மட்டுமட்டாக 150 எம்.பிக்களின் ஒத்துழைப்பை அரசு தரப்பு எட்ட முடியும்.

எது, எப்படி என்றாலும் நாளை வெள்ளிக்கிழமை மாலை சட்ட மூலம் மீதான வாக்கெடுப்பை அடுத்து நிலைமை தெளிவாகிவிடும்.

சட்டம் நிறைவேறினாலும் ஜனாதிபதி ரணிலுக்கு சந்தோஷம்; நிறைவேறாமல் போனாலும் அவருக்கு வாசிதான். அதனால்தான் எது நடந்தாலும் நன்மைக்கே என்ற நிலைமை ரணிலுக்கு என்றேன்.

திருத்தச் சட்டம் நிறைவேறினால் மக்களுக்கு அளித்த வாக்குறுதிப்படி 19 ஆவது திருத்தச் சட்ட ஏற்பாட்டில் கணிசமானவற்றை மீளக் கொண்டு வந்து விட்டேன் என அவர் புளகாங்கிதம் அடையலாம்.

நிறைவேறாவிட்டால் அவருக்கு என்ன நஷ்டம்? முழு நிறைவேற்ற அதிகார ஜனாதிபதிப் பதவியும் அதிகாரம் வெட்கப்படாமல் தொடர்ந்து அவரிடமே இருக்கும் என்பதுதான் அதன் விளைவு. அதுவும் அவருக்கு மகிழ்ச்சிதானே...?

அப்படி நிகழ்ந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான், அரசு தரப்பில் இந்தச் சட்டத் திருத்தத்திற்கு ஆதரவு அளிப்போரோடு சேர்ந்து வாக்களிக்க எதிரணித் தரப்புகள் முன் நிற்கின்றன என்பதும் தெளிவு.

சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா?

***

இந்தப் பத்தியில் அரசியல் மற்றும் குழப்பங்களை அதிகமாகப் பார்த்த உங்களுடன் இன்று ஒரு வித்தியாசமான விடயத்தை பகிரலாம் எனக் கருதுகின்றேன். இதனால் பல வர்த்தகர்கள் என் மீது கோபம் கொள்ளக் கூடும். ஆனால் வாசகர்கள் அதிகம் விரும்புவார்கள்.

நாட்டில் தற்போது என்ன பொருள், என்ன விலை என்ற வரையறை இன்றியே விற்பனை நடப்பது யாவரும் அறிந்த விடயம்தான். நகரில் பெரிய பெரிய கடைகள் அதிக வலையில் விற்பதும் சொல்லிக் களைத்துப்போன விவகாரமே.

ஊர்காவற்றுறை கந்தையா கடையில் மாவு ஒரு கிலோ 280 ரூபாவாகவும், சீனி ஒரு கிலோ 240 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

ஆனால் யாழ் நகரில் மாவு 300 ரூபாவாகவும், சீனி 270 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும் நிலையில், நகரில் இருந்து மேலும் 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஒரு கிராமத்தில், எங்கோ ஒரு மூலையில் இந்த விலைக்கு இவை விற்பனை செய்யப்படுவது வரவேற்கப்பட வேண்டிய விடயம்தான். ஆனால் ஒரே ஒரு கேள்வி.

ஊர்காவற்றுறையில் இந்த விலை சாத்தியம் என்றால், யாழ் நகரத்தில் மட்டும் ஏன் அது சாத்தியப்படவில்லை? விவரம் புரிந்தவர்கள் விளக்கம் தருவார்களா?

**- மின்னல் -**







தோற்றம் : 29.08.1990

மறைவு : 08.09.2022

45ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும்

கடந்த 08.09.2022 ஆந் திகதி அகாலமரணமடைந்த எமது குடும்ப குல விளக்கு

அமரர். கிருஷ்ணகுமார் சரவணபவன்

அவர்களின் அந்தியோட்டி கிரியைகள் இன்று (20.10.2022) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். நாளை மறுதினம் (22.10.2022) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் சபீண்டிகரண கிரியைகள் நடைபெறும். அத்துடன் (23.10.2022) ஞாயிற்றுக் கிழமை நல்லூரில் அமைந்துள்ள துர்க்கா மணி மண்டபத்தில் முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தயவு செய்து இவ்அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தங்களை அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

3/6, பழைய தயாற்கந்தோர் வீதி,
கொக்குவில் கிழக்கு.

அன்பரங்கம்,
மாதகல்.

– குடும்பத்தினர் –

திரு.சு. கிருஷ்ணகுமார் - தந்தை
(ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர்
தென்மராட்சி கல்வி வலயம்)
(Country Director IMHO- USA)

V2 TRAVELS இன் ஊடாக பதிந்து அமெரிக்கா சென்றவர்களின் விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.

Search Facebook
V2 Travels and Tours

இந்த அதிஸ்டத்தினை நீங்களும் பயன்படுத்துங்கள். மற்றவர்களுக்கும் பகிருங்கள். இதன்மூலம் நீங்களோ உங்கள் அன்புக்குரிய நண்பர்கள்,உறவினர்கள் என அனைவரும் உங்கள்மூலமாக இந்த அதிஸ்டத்தினை பெற இந்த தகவலினை பகிருங்கள்.

# அமெரிக்க லொத்தர் விசா

## நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

VISA

அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

Love You

**0768226244**
**0768226240**

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

EMERGENCY ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

## பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பேரவலத்தின் சூத்திரதாரி

**“நாட்டின் தற்போதைய நிலைமையில் சர்வதேச நாணய நிதியம் கூறுவதைக் கேட்க வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம். இதனால் ஏழை மக்களிடமும் பாரபட்சமின்றி வரி அறவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.**

**– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

**வரிக் கொள்கை தொடர்பில் நாட்டு மக்களுக்கு நேற்று மாலை தாம் ஆற்றிய விசேட உரையின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியிருக்கின்றார்.**

**ஜனாதிபதி ரணிலின் உரை சில விடயங்களைப் புட்டு வைத்திருக்கின்றது.**

**இந்த இக்கட்டு நிலைமை நேர்ந்தமைக்குக் காரண கர்த்தா – சூத்திரதாரி – யார் என்பதை அவர் வெளிப்படையாகச் சுட்டாவிட்டாலும், அவரது வார்த்தைகளுக்கும் வசனங்களுக்கும் இடையில், சொற்களில் இல்லாமல், அந்தக் குற்றவாளி யார் என்பதை அவர் கோடி காட்டி இருக்கின்றார்.**

**2019 நவம்பரில் இடம்பெற்ற பொறுப்பற்ற போக்கு அல்லது நடவடிக்கைதான் இந்தப் பின்னடைவு நிலைமையை மிக மோசமாகியது என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.**

**“2019 நவம்பர் மாதமளவில் நமது நாட்டில் வரிகள் வெகுவாகக் குறைக்கப்பட்டன. இதனால் அரசின் வருவாய் 8.5 வீதமாகக் குறைவடைந்தது. ஒப்பந்தத்துக்கு முரணாக செயற்பட்டதால் சர்வதேச நாணய நிதியம் உதவிகளை வழங்க முடியாது என அறிவித்தது.**

**“அந்த ஆண்டு சுமார் 600 முதல் 700 பில்லியன் ரூபாவை (அரசு) இழக்க நேரிட்டது.”**

**– என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த தகவல்களுக்கு இடையேதான் இந்த நாட்டின் பெரும் பின்னடைவுக்கு காரணமான விடயம் புதைந்து கிடக்கின்றது.**

**2019 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் சுமார் 68 லட்சம் வாக்குகள் பெற்று கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்று ஜனாதிபதியானார்.**

**அதே வீச்சில் நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்தி, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை ஈட்டி, அதன் மூலம் தனது நிறைவேற்றதிகாரத்தை வலுப்படுத்தி, தனது ஆட்சி அதிகாரத்தையும் உறுதிப்படுத்திக் கொள்ளத் திட்டம் தீட்டினார்ர் அவர்.**

**செல்வாக்குள்ள தரப்புகளின் – குறிப்பாக வர்த்தக சமூகத்தின் – ஆதரவை ஈட்டுவதன் மூலம் வாக்குகளை இலகுவாகச் சூறையாடலாம் என்ற குயுக்தித் திட்டம் வகுத்த அவர், அதற்காக கண்மூடித்தனமான வரி விலக்குகளையும் தளர்வுகளையும் பொறுப்பின்றி அறிவித்தார்.**

**அந்த வரி விலக்குகள் நாடு சுமார் 70 ஆயிரம் கோடி ரூபா வருமானத்தை இழக்க வழி செய்தன.**

**அங்குதான் நாட்டின் பொருளாதாரத்தின் திடீர் மோசமான சரிவு ஆரம்பித்தது. தொடர்ந்து வந்த கொவிட் நெருக்கடி, அரச நிர்வாகத்தில் ஊழல்கள், மோசடிகள், அரச நிதியை ஒரு தரப்பே சூறையாடி வெளிநாடுகளில் பதுக்கியமை போன்ற இன்னோரன்ன காரணங்களால் நாடு அதல பாதாளத்தில் வீழ்ந்தது.**

**இந்தப் பேரழிவுகளின் சூத்திரதாரியை பெயர் குறிப்பிடாமல் கோடி காட்டி இருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

**இந்த சூத்திரதாரியின் செயற்போக்கின் விளைவுதான் இன்று ஏழைகள் மீதான வரிவிதிப்பும் என்பதை ஜனாதிபதி ரணிலின் பேச்சு எடுத்துக்காட்டுகிறது.**

# யாழ்.மாவட்ட செயலகத்தில் 22 ஆம் திகதி மாபெரும் தொழிற்சந்தை நடத்த ஏற்பாடு!

யாழ்ப்பாண மாவட்ட செயலகமும், மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களமும் இணைந்து மாவட்ட செயலகத்தில், எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை தொழிற்சந்தையை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது என மாவட்ட செயலர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் –

மனிதவலு வேலைவாய்ப்பு திணைக் களத்தில் சுமார் 19 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளையோர் தொழில் தேடுபவர்களாகப் பதிவு செய்துள்ளனர்.

அவர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அத்துடன் தொழிற்சந்தைக் குரிய தங்களுடைய கற்கை நெறிகளை பயில ஆர்வம் உள்ளவர்களுக்கு அந்த பயிற்சி நெறியை ஏற்படுத்தும் நோக்கிலும் இந்த தொழில் சந்தை நிகழ்வு நடைபெறுகிறது.

குறிப்பாக தனியார் உற்பத்தி நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் துறை, ஹோட்டல் துறை, கணக்கியல் துறை, காப்புறுதித்துறை, ஆடை தொழிற்சாலைகள், பாதுகாப்பு சேவை, தாதியர் சேவை மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக் கள் போன்ற விடயங்களை உள்ளடக்கி சுமார் 40 இற்கும் மேற்பட்ட தொழிற்துறை நிறுவனங் களும், பயிற்சி நெறி நிறுவனங்களும் பங்கேற்கவுள்ளனர்.

தொழிற்பயிற்சி பாடநெறிக்கான கணனித்துறை, தாதிய பயிற்சிநெறி ஏனைய தொழில் பயிற்சி நிறுவனங்கள் கப்பல் துறை தொழில்வாய்ப்பு மற்றும் அதற்கான தொழிற்பயிற்சி மற்றும் ஹோட்டல் முகாமைத்துவத்தில் பயிற்சிநெறிகள் தொடர்பான நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ளன.

தொழில் தேடுபவர்களையும் தொழில் வழங்குநர்களையும் இணைக்கும் மாபெரும் தொழிற்சந்தையாக இது நடத்தப்படவுள்ளது.

தொழில் தேடுபவர்களையும், தொழில் வழங்குநர்களும் தங்களுடைய தேவைகளை இந்த மாபெரும் தொழிற்சந்தை ஊடாகப் பெற் றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இந்த மாபெரும் தொழிற்சந்தை தொழில் தேடும் இளைஞர், யுவதிகளுக்கும் தொழில் தகைமை மேலும் மேம்படுத்த ஆர்வம் உடையவர்களுக்கும் பெரிய வாய்ப்பாக அமையும். – என்றார்.

# புதிய நீர் இணைப்பு கட்டணம் அதிகரிப்பு

கே.எ.ஹமீட்

புதிய நீர் இணைப்புகளுக்காக அறவிடப்படும் கட்டணத்தை அதிகரிக்க நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தீர்மானித்துள்ளது.

நிலவும் மூலப்பொருள்களுக்கான தட்டுப்பாடு மற்றும் அவற்றின் அதிகரிப்பு என்பவற்றை கருத்திற் கொண்டு இந்த கட்டண உயர்வு மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்த சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது, புதிய நீர் இணைப்பை பெற்றுக் கொடுப்பதற்கான 17042.50 ரூபா கட்டணம் 24500 ரூபா ஆகவும் சமுத்திக்கான நீர் இணைப்புகளை பெற்றுள்ளதாக 5300 ரூபாவாக காணப்பட கட்டணம் 6300 ரூபாவாக அதிகாரிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், புதிய அதிகரிப்பு தொடர்பிலான சுற்றுநிரூபம் விரைவில் வெளியிடப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அதிபர், ஆசிரியர் வெற்றிடங்களை விரைவில் பூரணப்படுத்துவோம்!

## உறுதியளிக்கிறார் கல்வி அமைச்சர் சுசில்



அரச வேலைவாய்ப்புக்காக இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கும் 53 ஆயிரம் பட்டதாரிகளுக்கு பொதுப் பரீட்சை நடத்தி ஆசிரியர் சேவைக்கு இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அடுத்தவருடம் முதலாம் தவணை ஆரம்பிக்கும்போது இந்த நடவடிக்கைகளை பூரணப்படுத்துவோம் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பினர் மயந்த திஸாநாயக்கவால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்கள் இருக்கின்றன. அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வியியல் கல்லூரிகளில் இருந்து வெளியேறிய ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அபிவிருத்தி அதிகாரிகளாக 22 ஆயிரம் பட்டதாரிகள் பாடசாலைகளுக்கு நியமிக்கப் பட்டிருக்கின்றனர்.

அவர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்வது தொடர்பில் அமைச்சரவை அனுமதிக்காகச் சமர்ப்பதிருக்கின்றோம்.

அத்துடன் அரச சேவைக்கு 53 ஆயிரம் பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் பொதுத் பரீட்சை நடத்தி புள்ளிகள் அடிப்படையில் அவர்களை தேசிய, மாகாண பாடசாலைகளுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

அதேநேரம் மாகாண மட்டத்திலும் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நடவடிக்கைகளை அடுத்த வருடம் முதலாம் தவணை ஆரம்பிக்கும் போது பூரணப்படுத்த முடியுமாகும்.

மேலும் பாடசாலைகளில் வெற்றிடமாகி இருக்கும் அதிபர் வெறிடங்களை பூரணப் படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம். பாடசாலைகளில் பதில் அதிபர்களாக இருந்தவர்களை அதிபர் சேவை 3 இற்கு நியமனம் வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

என்றாலும் 2019 இல் அதிபர் சேவை 3ஆம் தரத்துக்கு 1700 பேருக்கு பரீட்சை நடத்தியபோது, பரீட்சையில் அதிக புள்ளி எடுத்தவர் நேர்முக பரீட்சையில் புள்ளி குறைந்ததால் அவர்களில் 169பேர் நீதிமன்றம் சென்றனர். இதன் காரணமாக அந்த நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது.

அதனால் பதில் அதிபர்கள் 2 ஆயிரத்து 682 பேரும் நேரமுக பரீட்சையில் தெரிவான 1700 பேர் மற்றும் நீதிமன்றம் சென்ற 169 பேர் இந்த 3 தரப்பினரையும் அழைத்துக் கலந்துரையாடி, இணக்கப்பாட்டுக்கு வர நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

என்றாலும் அரச சேவை ஆணைக் குழுவுடன் கலந்துரையாடி பதில் அதிபர்கள் 2 ஆயிரத்து 682 பேருக்கு அதிபர் நியமனம் வழங்க தற்போது நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். அத்துடன் ஏனைய 700 பேர் மற்றும் 169 பேரையும் இணைத்து மொத்தமாக சுமார் 4 ஆயிரம் அதிபர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பிரச்சினைக்கும் அடுத்த வருடம மார்ச் மாதம் முதலாம் தவணை ஆரம்பிக்கும் போது தீர்வுகாணலாம் என எதிர்பார்க்கின்றோம்.

என்றாலும் எதிர்வரும் டிசெம்பர் மாதமாகும் போது 60 வயது பூரணமான அதிபர்கள் ஓய்வு பெற்றுச்செல்லும்போது மேலும் அதிபர் வெற்றிடம் இடம்பெறும். அதனால் அதிபர் சேவை தரம் 3 இற்கு விண்ணப்பம் கோர நடவடிக்கை எடுப்போம். – என்றார்.

# ‘கிசுகிசு’ செய்திகள் தொடர்பாக அவதானம் செலுத்த மாட்டோம்!

## பந்துல குணவர்தன திட்டவட்டம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும், முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிற்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றதாகக் கூறப்படும் விடயம் தொடர்பில் அமைச்சரவையில் அவதானம் செலுத்தப்படவில்லை.

அமைச்சரவையில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களுக்கு முக்கியத்துவமளிக்கப்படுமே தவிர, ‘கிசுகிசு’ செய்திகள் அல்ல என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு இடம்பெற்ற போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும், முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிற்கும் இடையில் இடம்பெற்றசந்திப்புதொடர்பில்கேள்வியெழுப்பப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அரசாங்கம் என்ற ரீதியில் இது தொடர்பில் எந்தவொரு நிலைப்பாட்டையும் தெரிவிக்க முடியாது. அரசாங்கம் என்ற ரீதியில் அமைச்சரவையில் இது தொடர்பில் எந்தவொரு கலந்துரையாடலும் இடம்பெறவில்லை. அவ்வாறு ஏதேனும் காணப்பட்டால் அடுத்த ஊடக சந்திப்பில் அது தொடர்பில் தெரியப்படுத்தப்படும்.

அமைச்சரவையில் அநாவசிய விடயங்கள் பற்றி அவதானம் செலுத்தப்பட மாட்டாது. அதற்கென வழமையான நிகழ்ச்சி நிரலொன்று காணப்படுகிறது.

மேற்படி நிகழ்ச்சி நிரலுக்கமைய அவரவருக்கு தத்தமது மதத்தை வழிபடுவதற்கும் முதலில் வாய்ப்பளிக்கப்படும். அதனைத் தொடர்ந்து சமுகமளித்துள்ள அமைச்சர்கள் தொடர்பில் தெரிவிக்கப்படும்.

அதன் பின்னர் வருகை தந்துள்ள அமைச்சர்கள் முந்தைய வாரங்களில் சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரங்களில் ஏதேனும் திருத்தங்கள் காணப்பட்டால் அவற்றைத் தெரியப்படுத்துவர். திருத்தங்கள் இல்லையெனில் ஏனைய அமைச்சரவை பத்திரங்கள் எடுத்துக் கொள்ளப்படும். இவற்றுக்கு அப்பால் வேறு ஏதேனும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் காணப்பட்டால், அவை தொடர்பில் மாத்திரமே அவதானம் செலுத்தப்படும். எனவே, அமைச்சரவை கூட்டத்தின் போது எந்தவொரு கருத்தும் தெரிவிக்கப்பட மாட்டாது. – என்றார்.

அமெரிக்காவிலுள்ள முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ , தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜனாதிபதியுடன் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பிலும், தேர்தல்கள் தொடர்பிலும் கலந்துரையாடினார் எனவும், தேர்தலுக்காக கூட்டணியமைப்பதில் அரசியல் ரீதியான இணக்கப்பாட்டை எட்டியுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





கொழும்பு தெஹிவளை மஹா விஷ்ணு மூர்த்தி தேவஸ்தான பிரம்மோற்சவ தினம் கடந்த திங்கட்கிழமை மாலை திருக்கல்யாண வைபவத்துடன் சிறப்பாக நடைபெற்றது.

பூமிதேவி ஸ்ரீ தேவி சமேதர வெங்கடேசப்பெருமான் வீதிஉலா சென்று நீர்த் தடாகத்தில் 1008 சஹஸ்ர தீப அலங்காரத்துடன் ஊஞ்சலில் அமர்ந்திருந்திருந்து அடியார்களுக்குக் காட்சியளித்தார்.



# தமிழர்களுக்கான தனித்துவ அடையாளங்கள் சோழர்களின் ஆட்சியில் தான் நிறுவப்பட்டன!






## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு




சோழர்களின் ஆட்சிக்காலம் என்பது தமிழக வரலாற்றின் பொற்காலம் என்றே போற்றப்படுகிறது, அதிலும் குறிப்பாக இராஜராஜ சோழன் காலத்தே தமிழும், சைவமும் செழிப்புற்றிருந்ததை வரலாறு சொல்கிறது. தமிழர்களுக்கான மாபெரும் அடையாளமான தஞ்சைப் பெருங்கோயில் உள்ளிட்ட பல அடையாளங்களை நிறுவிய சிறப்புமிக்க சோழர்களின் ஆட்சிமுறையும், வீரமும், விவேகமும் தமிழர்கள் மார்தட்டிப் பெருமிதம் கொள்ளத்தக்க வரலாறுடையவர்கள் என்பதை எண்பிக்கும் சாட்சியங்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

ருத்ரக்ஷா அறக்கட்டளையின் (Ruthdraksha Foundation) ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை மாலை, சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் அமைந்துள்ள



இராணி சீதை திரையரங்கில் நடைபெற்ற இராஜராஜ சோழன் விருது வழங்கும் விழாவில், சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு, கர்நாடகா, இலங்கை, மலேசியா என்று நாடுகடந்த ரீதியில் மொழிக்கும்,கலைக்கும், இனத்துக்குமாகத் தத்தம் துறைசார்ந்து அளப்பெரும் பணியாற்றிய பல ஆளுமைகள் இந்நிகழ்வில் இராஜராஜசோழன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நவாலியில் குடும்பப் பெண்ணுடன் தவறான உறவை பேணியவர் பெண்ணின் மகளை துஷ்பிரயோகப்படுத்திய குற்றத்தில் கைது!

குடும்ப பெண்ணொருவருடன் தவறான தொடர்பைப் பேணி வந்த நபர், அந்தப் பெண்ணின் 13 வயதான மகளை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி வந்தார் எனும் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லுண்டாய் பகுதியில் வசிக்கும் பெண்ணொருவருடன் 41 வயதான நபர் ஒருவர் தவறான உறவைப் பேணி வந்துள்ளார் எனவும், இந்த நிலையில் அப்பெண்ணின் 13 வயதான சிறுமியையும் தொடர்ந்து பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாகியுள்ளார் என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

அது தொடர்பில் அறிந்த, அயலவர்கள் மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதை அடுத்து, மானிப்பாய் பொலிஸாரால் நேற்று (புதன்கிழமை) சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி வந்த குற்றத்தில் அந்நபரை கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை பாதிக்கப்பட்ட சிறுமியை மீட்டு மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலையில் பொலிஸார் சேர்த்துள்ளனர்.







# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம்
# பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall

Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





## FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

# யாழில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டவர்கள் வேலை செய்த கடைகளை மூடுவதற்கு நடவடிக்கை!



யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு முன்பாக உள்ள இரு ஆடை விற்பனையகத்தில் பணியாற்றும் நால்வர் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி ஆடை விற்பனை நிலையங்கள் இரண்டினதும் வியாபர அனுமதியை இரத்து செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் எடுத்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை யாழ்.போதனா வைத்திய சாலைக்கு முன்பாக உள்ள இரண்டு ஆடை விற்பனை நிலையங்களில் வேலை செய்யும் நான்கு பேர் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுகின்றனர் என யாழ்.மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விற்பனை நிலையத்துக்கு அண்மையாக வைத்து நான்கு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து ஆயிரம் போதை மாத்திரைகள் மற்றும் ஒரு தொகை ஹெரோயின் போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டன.

இந்நிலையில் வைத்திய சாலைக்கு முன்பாக போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி யாழ். மாநகர முதல்வருக்கு கடிதம் அனுப்பியதுடன் , அதன் பிரதி யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்கும், யாழ். வர்த்தக சங்கத்துக்கும் அனுப்பி இருந்தார்.

அந்த கடிதத்திற்கு, ‘பணிப்பாளர் அனுப்பிய கடிதம் கிடைத்தது. விரைவில் அந்த வர்த்தக நிலையங்களின் அனுமதி பாத்திரத்தை இரத்து செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும்’ என பணிப்பாளருக்கு மாநகர முதல்வர் பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

NFlash Super Detergent

வேலை வாய்ப்புக்கள்

வடக்கில் முன்னோடிகளாகத் திகழும் NFlash குழுமத்தின் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள்

கணணி உத்தியோகத்தர் - உயர்தரத் தகைமை, சாதாரண டிப்ளோமா
காட்சியறை முகாமையாளர் - யாழ்ப்பாணம், சங்கானை
சந்தைப்படுத்தல் மேற்பார்வையாளர் - வடக்கு மாகாணம்
சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் - வடக்கு மாகாணம்
விநியோக உதவியாளர் - வயதெல்லை (18-35)
பொதி செய்பவர் - பெண்கள்.
சாரதி - Light Vehicle licence
விற்பனை - விற்பனை ஊக்குவிப்பாளர்கள் (பெண்கள்)
மேற்பார்வையாளர் (முன்பள்ளி) - ஓய்வு பெற்ற உயர் நிலை ஆசிரியை
பகுதி நேர ஆசிரியை - ஆங்கிலம், சிங்களம்
பகுதி நேர வாகன சாரதி - ஆண்
துப்பரவுப்பணியாளர் - பெண்
உதவியாளர்- வாகன உதவியாளர் (பெண்),
ஆசிரியர்- தகுதிவாய்ந்த முன்பள்ளி ஆசிரியை

வெதுப்பக (வெதுப்பி) Bakery Bass ஆட்கள்தேவை
பலகார சமையல்காரர் - முறுக்கு, மிக்சர் ரோல், வடை போன்ற நொறுக்குத் தீனிகள் தயாரிப்பவர்கள் ஆண், பெண்)
பொதி செய்பவர் - பெண்கள்
மருத்துவர்கள் - சுதேச மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியா-ளர்கள்
தையல்கலைஞர் - பெண்
சாரதி - விற்பனையுடன் வாகனம் செலுத்துபவர்

EPF, ETF உடன் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் ஊக்கத்தொகை, தகுதி வாய்ந்தவர்கள் கீழ்காணும் முகவரிக்கு சுய விபரக் கோவையை அனுப்பவும் அல்லது எமது வட்ஸ் அப் இலக்கத்திற்கு குறுந்தகவல் (Message) அனுப்பவும்.

வட்ஸ் அப் - 0779635551
முகவரி - 186/11 NFlash Super detergent
நெசவுசாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
607A, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

# பொருளாதார சீர்திருத்தங்களையே நாட்டில் மக்கள் கோருகின்றனராம்!

## தேர்தலை அல்ல என்கிறார் சாந்த பண்டார



மக்கள் தேர்தலைக் கேட்கவில்லை. மாறாக, பொருளாதார சீர்திருத்தங்களுடன் கூடிய அபிவிருத்தியை கோருகின்றனர் என இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றில் கருத்து வெளியிட்ட அவர் –

உணவுப் பணவீக்கம் அதிகரித்துள்ளதால் அவதிப்படும் மக்களை விடுவிப்பதற்காக தாங்கள் செயற்பட்டு வருகின்றனர் எனவும் கூறினார்.

மக்கள் அழுத்தத்துக்கு உள்ளாகுவதை யாரும் பார்க்க விரும்பவில்லை என்றும் மீண்டும் வரிசை கலாசாரம் ஏற்படாத வகையில் வேலைத்திட்டம் வேண்டும் என்றும் வெளியுறுத்தினார்.

# திலினியிடம் வைப்பிலிட்டவர்களுக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் முஸ்தீபு!



நிதிமோசடி குற்றச்சாட்டு தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலி மற்றும் அவரிடம் பணத்தை வைப்பிலிட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதுவரை கிடைத்த தகவலின்படி, அவர் ஏமாற்றிய தொகை 300 முதல் 500 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல்வாதிகள், நடிகர்கள் மற்றும் நடிகைகள், பலம் வாய்ந்த வர்த்தகர்கள், மதத் தலைவர்கள் மற்றும் இரண்டு அல்லது மூன்று மூத்த பாதுகாப்பு அதிகாரிகளும் திலினியின் வாடிக்கையாளர்கள் பட்டியலில் இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திலினி பிரியமாலி, பாதுகாப்புப் படைத் தலைவர் ஒருவருக்கு கலாநிதி பட்டம் பெறுவதற்கு ஆதரவளித்துள்ளார் எனவும் சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது திலினி பிரியாமாலியிடம் வைப்பிலிட்டவர்கள் மற்றும் அவருக்கு ஆதரவாக செயற்பட்டவர்களை பொலிஸார் அடையாளம் கண்டு வருகின்றனர்.

எதிர்வரும் நாள்களில் மேலும் சந்தேகத்துக்கிடமான நபர்களை விசாரிக்கவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# இந்திய துணைத்தூதர் நெடுந்தீவுக்கு விஜயம்!



யாழிற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் செவ்வாய்க்கிழமை நெடுந்தீவுக்கு விஜயம் மேற்கொண்டார்.

அதன் போது, கல்வி, பொது உள்கட்டமைப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான வளர்ச்சிப் பிரச்சினைகள் தொடர்பாக நெடுந்தீவு பிரதேச செயலர் மற்றும் அரச அதிகாரிகளுடன் சிவில் சமூக உறுப்பினர்களுடன் இந்திய துணைத் தூதுவர் கலந்துரையாடினார்.

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இந்திய துணைத் தூதுவர், இந்திய புலமைப்பரிசில் பற்றி விளக்கமளித்ததோடு அங்கு மாணவர்களுக்கு பணப்பரிசுகளையும் வழங்கி வைத்தார்.

தீவகப்பகுதிகளில் சீன நாட்டினுடைய ஆக்கிரமிப்பு தொடர்பாக பேசப்படும் நிலையில் இந்தியத் துணைத்தூதரின் நெடுந்தீவிற்கு விஜயம் மேற் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## ஜனாதிபதி மஹிந்தவின் கன்னி உரை



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 155**

25 நவம்பர் 2005இல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் தான் விடுதலைப் புலிகளுடன் புதிய பேச்சுவார்த்தையைத் தொடங்க விரும்புகிறார் என்றும், சமஷ்டி ஏற்பாட்டையும் சுனாமிக் கட்டமைப்பையும் தனது அரசு நிராகரிக்கிறது என்றும் கூறினார்.

நோர்வையைப் பற்றி எதுவும் குறிப்பிடாமல், தான் ஐக்கிய நாடுகளின் மத்தியஸ்தத்திலோ இல்லாதுபோனால் பிராந்தியத்தின் பலமான இந்தியா அன்றில், இன்னும் ஒரு நாட்டின் அனுசரணையுடனோ பேச்சுவார்த்தைகளுக்கு போகலாம் என்ற செய்திகளைத் தந்தார்.

மஹிந்தவின் அந்த நாடாளுமன்றப் பேச்சு நடந்த இரண்டாம் நாள் தனது மாவீரர்தின உரையில் பிரபாகரன் 'அரசாங்கம் ஒரு நியாயமான தீர்வைத் தமிழ் மக்களின் முன் வைக்க வேண்டும். அப்படி முடியாதெனில் விடுதலைப் புலிகள் ஒரு தலைப் பட்சமாகத் தனிநாடு ஒன்று அமைக்கும் விளைவுகளை காண்பார்கள்' என்று அறிவிப்பு வெளியிட்டார்.

இந்தச் செய்தி பேச்சுக்களுக்காக என்ற எண்ணம் கொள்ளாமல் இருப்பதாக அமைந்தது. விடுதலைப் புலிகள் வட மாகாணத்தில் அரச படைகளைக் குறி வைத்துத் தாக்குதல்களை தொடர இவை டிசம்பர் 2005 இல் தினமும் நடந்தன.

யுத்த நிறுத்த ஒப்பந்த ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்க அரசாங்கத்துக்கு கடப்பாடு இருந்தாலும், அரசு கருணாவின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் கொரில்லா தாக்குதல்களை விடுதலை புலிகளுக்கு எதிராக ஏவியது. மட்டக்களப்பு நாடாளுமன்ற பிரதிநிதி ஜோசப் பரராஜசிங்கம் தனது நத்தார் பிரார்த்தனைகளுக்காக தேவாலயத்தில் இருந்தபோது கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து இராணுவம் நேரடியாகவே திருகோணமலையில் தமிழர்களான கல்லூரி மாணவர்கள் ஐவரைச் சுட்டுச் சாகடித்தது.

இவற்றால் கலக்கமடைந்த நோர்வேத் தரப்புகள் தாங்கள் இவற்றில் இரு பகுதிகளாலும் அவர்களது சுயநலத்திற்காகப் பாவிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய, தாங்கள் தொடர்ந்து பேச்சு வார்த்தைகளை முன்னெடுப்பதனால் அதற்காக மூன்று நிபந்தனைகளை முன்வைத்தனர்.

அதில் முதலாவது – தாங்கள் மூன்று மாதத்தில் ஒரு முறை பிரபாகரனோடு நேரடியான பேச்சில் இருக்க வேண்டும்.

இரண்டாவது – அரசாங்கம் நோர்வே ஈடுபட்டு செயல்படும் சமாதான பேச்சு வார்த்தைகளை குறை மதிப்பீடுகளுக்கு (**undermine**) ஆக்குவதற்கு முற்படக் கூடாது.

மூன்றாவது – இருதரப்பினரும் சமாதானப் பேச்சு வார்த்தைகளை முன்னெடுப்பதில் அக்கறை காட்ட வேண்டும்.

அந்த நிபந்தனைகளை சமர்ப்பித்த சமயங்களில் நோர்வே தரப்புகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. ஹெல்கிஸன் தனது பதவியை விட்டு நீங்கினார். எரிக் சொல்ஹெய்ம் சர்வதேச வளர்ச்சிகளுக்கான நாட்டின் அமைச்சரானார். அதைத் தொடர்ந்து மார்ச் 2006 இல் ஜொன் ஹன்ஸன்பவர் ஸ்ரீலங்காவிற்கான விசேட தூதுவராகப் பதவி ஏற்றார்.

ஆனாலும் மழைத் தூறல் தொடர்ந்து கொண்டே இருந்தது.

***

**இராணுவத் தீர்வு குறித்து கோட்டா**

மஹிந்தா பதவியேற்ற பின் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முறித்து, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை நடத்தி, வரலாறு காணாத பேரழிவுகளை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தி, தான் பிரபாகரனையும் விடுதலைப் புலிகளையும் அழித்து, நாட்டை பயங்கரவாதிகளிடம் இருந்து மீட்டு விட்டார் என்று மார்தட்டி, அதில் பேரினவாதியாக தனது அரசியல் வாழ்வைப் பலப்படுத்திக் கொண்டமை பொதுவாக மக்களும் வாசகர்களும் அறிந்தவையே.



ஊடகங்கள் போர்க்காலத்தில் இடம் பெற்ற அட்டூழியங்கள், வீர தீரங்கள், விளைவுகள், அழிவுகள், மக்கள் எதிர் கொண்ட அடக்குமுறைகள், கட்டுப்பாடுகள் எனக் கண்ணுக்குத் தெரிந்து விவரிக்க கூடியவற்றை தெரிவித்துக் கொண்டிருந்தன.

விளைவுகளைத் தமிழ் மக்கள் இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கான அடிமட்டத்திலிருந்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு இன்னும் பேச்சளவிலேயே இருக்கிறது. அதற்குக்கான காரணிகள் என்னவென தமிழ் மக்கள் சுய விமர்சனப் பாதையில் உற்றுநோக்கி, தமது அரசியல் எதிர்காலங்களையும் வாழ்வாதாரங்களையும் தூக்கி நிறுத்தக் கூடிய பாதைகளை வகுக்க வேண்டும். அதைச் செய்யப் போகிறார்களா, அன்றில் தங்கள் இயலாமைக்காக அரசியல்வாதிகள் தரும் விளக்கங்களையும், மற்றோர் கூறுபவற்றையும் கேட்டு, யார் யாரையோ நொந்து, குறைகள் கூறி, தங்களது வலியைக் குறைக்க விரும்புகிறார்களே ஒழிய, நிதர்சனப் பார்வைகள் இல்லை. ஆகவே மஹிந்த காலத்தின் நடப்புகளையும், போரின் முனைப்புகளையும், அதன் பின்னணிகளையும், சமாதான பேச்சு வார்த்தைகள், பிராந்திய அரசியல், சர்வதேச நிலைப்பாடு, புவியியல் அரசியலில் மாற்றங்களில் இருந்து பதிவிடுகிறேன்.



அவை தமிழ் மக்களது சுய விமர்சனத் திறக்கும், அவர்கள் கடைசியாக வகுக்கக் கூடிய பாதைகளுக்கும் உதவியாகலாம். தமிழ் மக்களுக்கான பாதை சர்வதேச ராஜதந்திரங்களில் தான் தற்பொழுது தங்கு உள்ளதாயின், இந்தப் புரிந்துணர்வுகளும், பேரினவாதம் பாவித்த தந்திரங்களை விளங்கிக் கொள்வதும் அவசியம். அதற்காக நடந்தவற்றையும் சுருக்கமாகப் பார்ப்பது தேவையாகிறது.

மஹிந்த அரசின் தொடக்க காலங்களில் அரசு, விடுதலைப் புலிகள் இரு பகுதியினருமே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை விட்டு வெளியேறி, சமாதான பேச்சு வார்த்தைகளை குழப்ப விரும்பவில்லை. அது, அரசு தாங்கள் சிந்தித்துள்ள அரசியல் தீர்வைப் புலிகளிடம் நேரடியாக பேசும் எண்ணத்துக்காகவோ, அன்றில் இராணுவ நிலைகளைக் கணக்கெடுக்கவோ எது வாகவும் இருந்திருக்கலாம். அதே சிந்தனையை விடுதலைப் புலிகளும் கைக் கொண்டிருக்கலாம்.

அந்தச் சாதகமான சந்தர்ப்பங்களில் நோர்வே அனுசரணையாளர்கள் 22 – 23 பெப்ரவரி 2006 பேச்சுவார்த்தைகளுக்கான திகதிகளாக நியமிக்கிறார்கள்.

மஹிந்த நோர்வேயில் அது நடப்பதை விரும்பவில்லை. விடுதலைப் புலிகள் நாட்டைத் தவிர்த்து ஐரோப்பாவில் சந்திப்பதையே விரும்புகின்றனர். ஆனால் ஐரோப்பிய ஒன்றியத்தினால் விடுதலைப் புலிகள் தடை செய்யப்படும் முஸ்தீபுகளால் அவர்களது எந்த நாடுகளிலும் இந்தச் சந்திப்பை நடத்திக் கொள்ள முடியாததாகிறது.

கடைசியாக சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் சந்திப்பு ஏற்படுத்தப்பட்டு இருதரப்புகளும் நடப்பவை பற்றி செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் ஆதங்கங்களையும் அறிந்து கொள்ள அது உதவும் எனக் கருதப்பட்டது. சந்திப்பில் போது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்துவது எனவும், அரசியல் தீர்வின் அடிப்படைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது எனவும் பேசத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் இரு பகுதிகளுமே அவற்றுக்கு முக்கியத்துவம் தராது அரசியல் கொள்கை விளக்கங்களிலும், பரஸ்பரம் குற்றம் சுமத்துவதிலும் ஈடுபட்டன. மஹிந்த அரசு தங்களது பிரதிநிதிகளாக தீவிர பேரினவாதிகளை அனுப்பியிருந்தமை எது வித சாதகமான தீர்வுப் பேச்சுக்களுக்கும் வழி தரவில்லை.

ஜெனிவாப் பேச்சுக்களுக்கு முன் இருந்த சிறிய சுமுகமான சூழ்நிலை விடுதலைப் புலிகள் அங்கிருந்து திரும்பியதும் மாற்றங்கள் கண்டது.

25 ஏப்ரல் 2006 இல் படைத் தளபதி சரத் பொன்சேகாவை தற்கொலை குண்டுதாரி அவரது படைத்தளத்திலேயே கொல்ல முயற்சித்தமை வன்முறைகளை ஆழமாக்கியது. அத்தோடு 11 மே 2006 கடற்படை யினர் பயணித்த வாகனத்தை தாக்கியதில் 17 பேர் கொல்லப்பட, அதன் எதிர்த் தாக்குதல்களில் பல பேர் மடிந்தனர்.

இவற்றுக்கிடையிலும் நோர்வே அனுசரணையாளர்கள் பார்சிலோனாவில் (ஸ்பெயின் நாட்டில் ஒரு பகுதி) ஓர் இரகசிய சந்திப்பை இருதரப்பினருடனும் ஏற்படுத்தி, அரசியல் தீர்வை நோக்கி முன்னேறுவதற்கான பேச்சுவார்த்தைகளுக்காக மூன்று அங்கங்கள் கொண்ட திட்டத்தை வகுத்தனர்.

அதன்படி –

முதலாவது – யுத்த நிறுத்தத்தை வலுப்படுத்தி, பேச்சுக்களை முன்னெடுத்தல். அதற்கான கால எல்லை – மே முதல் செப்டம்பர் 2006 வரை.

இரண்டாவது – சுமூகமான நிலைகளுக்குத் திரும்புவதற்காக கட்டமைப்புகளை நிறைவேற்றி அவற்றை நடைமுறைப் படுத்துவது. இவற்றுக்கான காலஎல்லை அக்டோபர் 2006 – ஏப்ரல் 2007.

மூன்றாவது – நிரந்தரத் தீர்வுக்கான தீர்மானத்திற்கு வருவது. இதற்கான கால எல்லை மே 2007 – டிசம்பர் 2007.

இந்தத் திட்டத்தை இருதரப்பும் ஏற்றுக் கொண்டாலும், அவற்றில் ஏதும் அக்கறை மஹிந்த தரப்பால் காட்டப்படாததால் நோர்வேத் தரப்புகள் அவர்கள் தந்திரங்களில்தான் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்களே ஒழிய, தீர்வு பற்றிய முலோபாய சிந்தனைகளைக் கொண்டிருப்பவர்களாகப் பார்க்கவில்லை என்று கருதியது.

இவற்றால் விசனமும் கோபமும் கொண்ட நோர்வேத் தரப்பின் ஹன்ஸன் பவரும், கொழும்புக்கான தூதுவர் பிரட்ஸ்கரும் முக்கியமும் பதற்றமும் நிறைந்ததுமான சந்திப்பு ஒன்றை அப்பொழுது பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவுடன் நடத்துகிறார்கள்.

அதன் விவரங்களை தொடர்ந்து நாளை பார்ப்போம்.

(வளரும்...)

# காபன் உமிழ்வில் நிகர - பூஜ்ஜிய இலக்குகளை எட்ட இந்திய நிறுவனங்கள் கடும் பிரயத்தனம்!

## 2050 க்குள் அதனை அடைய தீவிர முயற்சிகள் அவசியம்

அதிக செயல்திறன் மற்றும் பொறுப்பான வகையில் மூலப் பொருள்களைப் பெறுதல் ஊடாக முதலீடு செய்வதில் இருந்து தமது செயல்பாட்டு நிலைத்தன்மையை மேம்படுத்துவது வரை சிறந்த இந்திய நிறுவனங்கள் தங்கள் நிலைத்தன் மையை உயர்த்தி வருகின்றன. ஆனால் நாட்டிற்கு (காபன் உமிழ்வு தொடர்பில்) நிர்ணயிக்கப்பட்ட நிகர – பூஜ்ஜிய இலக் குகளை அடைய இன்னும் நிறைய முயற்சிகள் தேவைப் படுகின்றன.

பல இந்திய கார்ப்பரேட் நிறுவனங்கள் 2050 அல்லது அதற்கு முன் கார்பன் நியூட்ரல் ஆக (காபன் உமிழ்வு அற்ற) உள்நாட்டில் டிகார்பனைசேன் இலக்குகளை நிர்ணயித் துள்ளன. இதில் வேதாந்தா, ஆதித்யா பிர்லா குழுமம், ஜே.எஸ். டபிள்யூ. குழுமம், அதானி டிரான்ஸ்மின், மஹிந்திரா அண்ட் மஹிந்திரா மற்றும் டால்மியா சிமெண்ட் ஆகியவை அடங்கும். சந்தை மூலதனத்தின் அடிப்படையில் இந்தியாவின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனமான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ்,



2035க்குள் நிகர பூஜ்ஜியத்தை இலக்காகக் கொண்டுள்ளது.

நிறுவனங்கள் உள் கார்பன் விலையை நிர்ணயித்துள் ளன. இது அனைத்து வணிக முடிவுகளையும் எடுக்கும்போது குறிப்பிடப்படுகிறது. உதாரணமாக, வேதாந்தா ஒரு தொன் காபனீரொட்சைட் உமிழ்வுகளுக்கு இந்திய ரூபா1,125 கார்பன் விலையை நிர்ணயித்துள்ளது, மஹிந்திரா அண்ட் மஹிந்திரா 10 டொலர் (ரூ. 824) என நிர்ணயித்துள்ளது.

இந்திய நிறுவனங்கள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல், கழிவு




வெப்ப மீட்பு அமைப்புகள், அதிக திறன் வாய்ந்த இயந்திரங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிபொருள்கள் போன்ற துறைக ளில் தங்கள் கார்பன் தடயத்தைக் குறைக்க முதலீடுகளை அதிகரித்துள்ளன. உதாரணமாக, ஜே.எஸ்.டபிள்யூ. குழுமம் ஸ்டீல் இந்த ஆண்டு 175 மெகாவாட் கழிவு வெப்ப மீட்பு கொதி கலனை அமைக்கிறது. இதற்கிடையில், அல்ட்ராடெக் சிமென்ட் 2022 நிதியாண்டில் 121 மெகாவாட் சூரிய சக்தி யையும் 42 மெகாவாட் கழிவு வெப்ப மீட்பு அமைப்பையும் சேர்த்தது. 2025 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் குறைந்த கார்பன் செறிவான மின்சார வில் உலைகள் மூலம் ஒரு வரு டத்திற்கு பத்து லட்சம் தொன் எ∴கு மறுசுழற்சி செய்யும் திறனை டாடா ஸ்டீல் எதிர்பார்க்கிறது.

நிறுவனங்கள் தங்கள் மதிப்புச் சங்கிலிகள் முழுவதும் நிலையான நடைமுறைகளை உறுதி செய்வதற்காக தங்கள் சப்ளையர்களின் ஆய்வு மற்றும் கையடக்கத்தை முடுக்கி விட்டுள்ளன. சிறந்த நிறுவனங்களால் செய்யப்பட்ட நிலைத் தன்மை வெளிப்பாடுகளைக் காட்டுகின்றன.




இந்திய சந்தைக் கட்டுப்பாட்டாளர் 'செபி 'பரிந்துரைத்த 'வணிகப் பொறுப்பு மற்றும் நிலைத்தன்மை அறிக்கை' (பி.ஆர்.எஸ்.ஆர்.) தரநிலைகளின்படி நூறு நிறுவனங்கள் தாமாக முன்வந்து 2022 நிதியாண்டுக்கான தகவல்களை வெளியிட்டன. 2023 நிதியாண்டு முதல் சிறந்த ஆயிரம் இந் திய நிறுவனங்களுக்கு வணிகப் பொறுப்பு மற்றும் நிலைத் தன்மை அறிக்கை கட்டாயமாக்கப்படும்.

“கார்ப்பரேட்டுகள் நிலைத்தன்மை, தங்கள் குழுக்களின் திறன் மேம்பாடு, சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுமை அம்சங் களுக்கான குறிகாட்டிகளை வரையறுத்தல் மற்றும் அளவி டுதல், அந்த அம்சங்களின் மையமாக வணிகம் செய்தல் மற் றும் நிகர – பூஜ்ஜிய இலக்குகளுக்கான உறுதிப்பாட்டை மேற் கொள்வதில் கணிசமான முயற்சிகளை மேற்கொண்டுள் ளன என்று மதிப்பீடுகள், ஆராய்ச்சி மற்றும் ஆபத்து மற்றும் கொள்கை ஆலோசனை சேவைகளை வழங்கும் இந்திய பகுப்பாய்வு நிறுவனமான கிறிஸ்லின் நிலைத்தன்மை, ஆற் றல் மற்றும் பொருள்கள் விடயங்களுக்குப் பொறுப்பான மூத்த இயக்குனர் ராகுல் பிரிதியானி கூறினார்.

இன்றுவரை, சுமார் நூறு இந்திய நிறுவனங்கள் அறிவியல் அடிப்படையிலான இலக்கு அமைக்கும் முயற்சியில் (SBTi) உறுதியளித்துள்ளன, என்றார் அவர்.

முப்பதுக்கும் மேற்பட்ட இந்திய நிறுவனங்கள் 2050 அல் லது அதற்கு முன்னதாக நிகர – பூஜ்ஜிய உமிழ்வை அடைவதற் கான உறுதிப்பாட்டை அறிவியல் அடிப்படையிலான இலக்கு அமைக்கும் முயற்சி அமைப்புக்குச் க்கு சமர்ப்பித்துள்ளன.

ரீயவீஷ் என்பது ளீம்ஊ, ஐக்கிய நாடுகளின் குளோபல் காம்பாக்ட், வேர்ல்ட் ரிசோர்சஸ் இன்ஸ்டிடியூட் மற்றும் நேச்ச ருக்கான உலகளாவிய நிதியம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு கூட்டு முயற்சியாகும். மேலும் இது சுற்றுச்சூழல் நிலைத் தன்மை முன்னணியில் உள்ள நிறுவனங்களுக்கு இலக்கு




அமைக்கும் முறைகள் மற்றும் வழிகாட்டுதலை வழங்குகிறது.

CDP அறிக்கையின்படி, சுமார் 5.5 மில்லியன் டன் கார் பன்டை ஆக்சைடு வெளியேற்றத்தைக் குறைக்க SBTi உடன் தொடர்புடைய முன்னணி இந்திய நிறுவனங்களால் 2021இல் ரூ. 5,400 கோடி செலவிடப்பட்டது.

சிமென்ட், இரும்பு மற்றும் எ∴கு, சுத்திகரிப்பு நிலையங்கள், இரும்பு அல்லாத உலோகங்கள் மற்றும் இரசாயனத் தொழில் கள் ஆகியவற்றில் குறிப்பாக கவனம் செலுத்தப்படுகிறது, ஏனெனில் இந்த துறைகள் இந்தியாவின் மொத்த தொழில் துறை உமிழ்வுகளில் கிட்டத்தட்ட எழுபது வீதம் ஆகும் என்று கிரிஸில் அறிக்கை கூறுகிறது.

உலோக நிறுவனங்களுக்கு, பச்சை ஹைட்ரஜனை ஆற்றல் மூலமாக ஏற்றுக்கொள்வது அவர்களின் நிகர – பூஜ் ஜிய பயணத்திற்கான துருவ நட்சத்திரமாகும். பசுமை ஹைட் ரஜனை உற்பத்தி செய்து நுகரும் தொழில்நுட்பம் இன்னும்



பல வருடங்கள் உள்ள நிலையில், டாடா ஸ்டீல், ஜேஎஸ் டபிள்யூ, வேதாந்தா மற்றும் ரீபுனூஸி போன்ற நிறுவனங்கள் தொழில்துறை மதிப்பில் உள்ள மற்ற நிறுவனங்களுடன் தொழில்நுட்ப உறவுகளில் சங்கிலி இணப்பாக நுழைவதன் மூலம் புதிய தொழில்நுட்பங்களை செயல்படுத்துவதற்கான நம்பகத்தன்மையை ஏற்கனவே சோதித்து வருகின்றன.

சுற்றுச்சூழலுக்குப் பொறுப்பான முதலீடுகளைத் துரத்தும் உலகளாவிய மூலதனத்தின் அளவு காரணமாக இந்திய நிறுவனங்களின் நிலைத்தன்மைக்கான முயற்சிகள் ஒரு பகுதி யாகத் தூண்டப்பட்டுள்ளன என்று நிபுணர்கள் தெரிவித்த னர். உதாரணமாக, டாடா மோட்டார்ஸ் கடந்த ஆண்டு TPG ரைஸ் க்ளைமேட்டிலிருந்து 1 பில்லியன் டொலர் திரட்டியது, இது ஒரு பிரத்யேக காலநிலை முதலீட்டு நிதியாகும்.

இந்தக் கடனுடன் வரும் சற்றே குறைந்த வட்டி விகிதங் களில் இருந்து பயனடைய, தங்கள் விரிவாக்கத் திட்டங் களுக்கு நிதியளிப்பதற்காக, நிலைத்தன்மை – இணைக்கப் பட்ட கடன்களைத் (தட்டவும் பல நிறுவனங்கள் ஆர்வமாக உள்ளன.

எவ்வாறாயினும், நிகர – பூஜ்ஜிய இலக்குகளை அடைவ தற்கு தேவையான மூலதனத்தின் சுத்த அளவைக் கொண்டு இந்த இடத்தில் நிதி திரட்டும் வேகத்தை அதிகரிக்க வேண்டும். ளீசிசிநி ஆய்வின்படி, நிகர – பூஜ்ஜிய பாதையின் கீழ் இந் தியாவுக்கு 10.1 டிரில்லியன் டொலர் (ரூ. 830 லட்சம் கோடிக்கு மேல்) மொத்த முதலீடு தேவைப்படும். இது இந்தியாவிற்கான வருடாந்திர முதலீடு 200 பில்லியன் டொலர் ஆகும்.

“எனவே, நிகர – பூஜ்ஜிய இலக்குகளை அடையும் நடவ டிக்கைகள் மற்றும் நிலையான நிதி குறிப்பிடத்தக்க அளவில் துரிதப்படுத்தப்பட வேண்டும், என்று பிரிதியானி கூறி னார். கிறிஸில் மதிப்பீட்டின்படி, 2030க்குள் இந்தியாவிற்கு 20 லட்சம் கோடி ரூபா பசுமை மூலதனச் செலவு தேவைப் படும்.

**(மூலம்: 'த எக்கனமிக்ஸ் ரைம்ஸ்')**

காலைக்கதிர் Kalaikkathir

## நாட்டை மீட்டெடுக்கக் கடினமான தீர்மானம்; .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரிக் கொள்கை தொடர்பில் நாட்டு மக்களுக்கு நேற்று மாலை ஆற்றிய விசேட உரையின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தில் ஒரு முக்கியமான முன்னெடுப்பு கடந்த வாரம் நடைபெற்றது.

சர்வதேசநாணயநிதியத்தின்வருடாந்த (ஒக்டோபர் 07) கூட்டத்தில், எமது நிதி இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட குழுவொன்று பங்குபற்றியது. அதன்போது சர்வதேச நாணய நிதியத்தின் தலைமையில் இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகள் மற்றும் கடன் வழங்கிய சில தனியார் நிறுவனங்களுடனான சந்திப்பொன்று நடைபெற்றது.

75க்கும் மேற்பட்டோர் இந்தக் கூட்டத்தில் நேரடியாகவும், சூம் தொழில்நுட்பம் மூலமாகவும் கலந்து கொண்டனர். இலங்கைக்கு கடன் வழங்கிய ஜப்பான், சீனா, இந்தியா ஆகிய 3 பிரதான நாடுகளுடன், பொதுவான ஒரு இடத்தில் கூடி, சலுகை வழங்குவதற்கு எடுக்க வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதே இதன் முதன்மை நோக்கமாகும்.

இந்தச் சந்திப்பில், சர்வதேச நாணய நிதியமும் இலங்கையும் பொதுவான மேடை ஒன்றின் அவசியத்தை சுட்டிக் காட்டியிருந்தன. இந்தியாவும் சீனாவும் இது தொடர்பில் ஆராய்ந்து பதில் அளிப்பதாக அறிவித்துள்ளன. இருதரப்பு பேச்சுகள் நடத்த வேண்டியிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் மேலும் பல நாடுகள் கலந்து கொண்டன. குறிப்பாக அமெரிக்க திறைசேரியின் உதவிச் செயலாளர் இங்கு வருகை தந்திருந்தார். சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து அங்கு எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்துவதால் தான் எமக்கு இவற்றை செய்யும் வாய்ப்பு கிடைத்தது.

இலங்கை அரசின் வருமானம் தொடர்பில் முக்கிய விடயமொன்று இருக்கின்றது. 2015ஆம் ஆண்டு சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்தபோது ஆரம்ப வரவு - செலவுத் திட்டத்தில் மிகையிருக்க வேண்டும் என எமக்குக் கூறப்பட்டது. அந்த மிகையை 2017 - 2018 இல் காண்பித்தோம். எனினும், 2019 உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பால் அது குறைவடைந்தது. எனினும், அதனால் பாரிய பிரச்சினை எதுவும் ஏற்படவில்லை. வரவு - செலவுத் திட்டத்தில் மிகையிருப்பதால் எமது வருவாயை அதிகரிக்க முடியும் என்று அவர்கள் நம்பினார்கள்.

அந்த சமயம் நமது வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14.5% - 15% வரை இருந்தது. ஆனால், இதை படிப்படியாக 17% - 18% ஆக அதிகரிக்க முடியுமென்று நாம் அறிவித்தோம்.

எனினும், 2019 நவம்பர் மாதமளவில் நமது நாட்டில் வரிகள் வெகுவாகக் குறைக்கப்பட்டன. இதனால் அரசின் வருவாய் 8.5% மாக குறைவடைந்தது. ஒப்பந்தத்துக்கு முரணாக செயற்பட்டதால் சர்வதேச நாணய நிதியம் உதவிகளை வழங்க முடியாது என அறிவித்தது.

அந்த ஆண்டு சுமார் 600, 700 பில்லியன் ரூபாய்களை இழக்க நேரிட்டது. அதே நேரத்தில், நாங்கள் கொரோனாத் தொற்றுநோயை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்த நிலைமையே இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய முக்கிய காரணிகளாக அமைந்தன.

நமது ஆரம்ப வரவு - செலவுத்திட்டத்தில் மிகையைக் காண்பிக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் எங்களுக்கு அறிவித்திருந்தது. அவர்களின் ஒத்துழைப்பு எங்களுக்குத் தேவை என்பதால் நாங்கள் அதற்கு உடன்பட்டிருந்தோம்.

அடுத்து, நாட்டின் வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.5% இல் இருந்து 14.5% ஆக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டது. இதனை ஒரேயடியாகச் செய்வது சாத்தியமில்லை. 2026ஆம் ஆண்டுக்குள் நாட்டின் வருமானத்தை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14.5% ஆக உயர்த்த திட்டமிட்டுள்ளோம்.

முதலில் நமது வருமானத்தை எப்படி அதிகரிப்பது என்று சிந்திக்க வேண்டும். வருமானம் குறைந்ததால்தான் பணம் அச்சடிக்கப்பட்டது.

கடந்த இரண்டு வருடங்களில் 2300 பில்லியன் ரூபா அச்சிடப்பட்டுள்ளது. இதனால் பணவீக்கம் 70% - 75% வரை உயர்ந்துள்ளது. மேலும் உணவுப் பணவீக்கம் அதனை விடவும் அதிகரித்துள்ளது.

இவற்றையும் கட்டுப்படுத்த வேண்டும். அதேபோன்று வருமானத்தை ஈட்டவும் வேண்டும். எனவே, இந்தப் பேச்சுகளின் போது புதிய வரி முறை முன்வைக்கப்பட்டது.

குறிப்பாக ஏற்றுமதி கைத்தொழில்களிடமிருந்து வரி அறிவிட வேண்டும் என்றும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்திருந்தது.

ஏற்றுமதி பொருளாதாரம் உள்ள நாடுகளில் குறிப்பாக வரி செலுத்தப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் எமது பிரதான ஏற்றுமதிப் பொருளாதாரம் பெருந்தோட்டக் கைத்தொழில் என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் தேயிலை, தேங்காய், இறப்பர் போன்றவற்றுக்கும் வரி விதிக்கப்பட்டது.

எனவே, அந்த இலக்கை நோக்கி செல்வதற்கு வரி செலுத்த வேண்டும் என முடிவுசெய்தோம். ஏற்றுமதிதுறைதற்போது கேள்விக்குறியாகியுள்ளது. அவ்விடயங்கள் சர்வதேச நாணய நிதியத்திற்கு சமர்ப்பிக்கப்படும். அது தொடர்பில் விளக்கமளிப்பது தொடர்பாக கவனம் செலுத்தியுள்ளோம்.

இரண்டாவது விடயம் தனிநபர் வரி. நாம் பெரும்பாலும் மறைமுகமாகவே வரியைப் பெற்றிருந்தோம். நாட்டின் பெரும்பான்மையான ஏழை மக்களுக்கு மறைமுக வரிகளைச் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. தற்போது நமது நேரடி வரி வருமானம் 20 சதவீதம் ஆகும். 80 சதவீதம் மறைமுகமான வரி வருமானமாகப் பெறப்படுகிறது.

எனினும், இவ்விடயம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் பிரச்சினை ஒன்றை சுட்டிக்காட்டியுள்ளது. நேரடி வரி மூலம் பெறப்படும் வருமானம் 20 சதவீதத்திலும் அதிகமாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. இல்லையேல் எமது இலக்கு வெற்றியளிக்காது என்றும் இந்நாட்டிலுள்ள சாதாரண மக்களுக்கும் வரிச் செலுத்த நேரிடும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

எனவே, இதனடிப்படையில், 2026 ஆம் ஆண்டை இலக்காகக் கொள்வதற்காக இரண்டு இலட்சம் வருமானம் பெறுவோருக்கு மட்டும் இந்த வரி அறவீட்டை மட்டுப்படுத்த முடியுமா என்பது தொடர்பில் திறைசேரியும் சர்வதேச நாணய நிதியமும் பேச்சில் ஈடுபட்டன. எனினும், அந்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

இதன் விளைவாக இறுதியில் ஒரு இலட்சத்தை விடவும் கூடுதலான வருமானத்தைப் பெறுபவர்களிடமிருந்து வருமான வரி அறவிட நேர்ந்தது. இதன் காரணமாக நாட்டில் பாரிய பிரச்சினை எழுந்துள்ளது.

இந்தப்பின்னணியின்படி, இவ்வாறான வரி அறவீட்டு முறையொன்று இல்லாவிட்டால் எமது இலக்கை அடைய முடியாமல் போகலாம் என்பதை நான் கூற விரும்புகின்றேன்.

2026 ஆம் ஆண்டுக்குள் எமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14.5 சதவீதம் தொடக்கம் 15 சதவீதம் வரையிலான சதவிகிதத்தை வருமானமாக பெறுவதே எமது இலக்காகும். எனவே, நாம் இந்த வேலைத் திட்டத்திலிருந்து ஒதுங்கினால், சர்வதேசநாணயநிதியத்திடமிருந்தும் எமக்கு உதவி கிடைக்காமல் போய்விடும்.

சர்வதேச நாயண நிதியத்தின் உத்தரவாதம் கிடைக்காமல் போனால், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் மற்றும் உதவி வழங்குவதாக கூறும் நாடுகளிடமிருந்து எமக்கு உதவிகள் கிடைக்காமல் போய்விடும். அவ்வாறு நிகழ்ந்தால், மீண்டும் வரிசைகளில் காத்திருக்கும் யுகத்துக்கே நாம் செல்ல நேரிடும்.

இதைவிடவும்மிகக்கஷ்டமானகாலத்தை எமக்கு எதிர்காலத்தில் சந்திக்க நேரிடும். இந்தக் கடன்களைப் பெற்றுக் கொண்டு, கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை நாம் செயல்படுத்த வேண்டும். இவற்றை நாம் விரும்பிச் செய்யவில்லை. விருப்பமில்லாவிட்டாலும் கூட சில விடயங்களை எமக்கு செய்ய நேரிடுகின்றது. என்றாலும் அந்த முடிவுகளை நாம் அவ்வப்போது பரிசீலித்து வருகின்றோம்.

கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை வெற்றிபெறச் முன்னெடுக்கும் அதே நேரம், பெரும்போகத்தில் மிகச் சிறந்த அறுவடையும் கிடைக்குமாக இருந்தால் அதன் மூலம் சிறந்த பொருளாதார இலாபத்தை ஈட்டிக்கொண்டு நாம் முன்னோக்கிச் செல்ல முடியும். அப்போது எமக்கு ஏற்பட்டிருக்கும் பொருளாதார அழுத்தம் குறைவடையும்.

அதேபோன்று நாம் வெளிநாட்டுக் கையிருப்பை அதிகரித்துக் கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளோம். இந்தச் செயற்பாடுகள் யாவற்றையும் முன்னெடுப்பதன் மூலம் எமக்கு முன்னோக்கிச் செல்லக்கூடியதாக இருக்கும்.

நாங்கள் தற்போது கடினமான காலகட்டத்திலேயே இருக்கின்றோம். இது போன்ற கடினமான காலத்தில் நாம் கடினமான முடிவுகளையும் எடுக்க நேரிடும்.

வேறு யாரும் முன்வராத நிலையிலேயே நான் இந்தக் கடினமான பொறுப்பை ஏற்றிருக்கின்றேன். எனவேதான் இது தொடர்பில் அனைவருக்கும் விளக்களிக்க வேண்டியது எனது கடமை என்பதை நான் உணர்ந்தேன். இது தொடர்பில் மேலும் பேச்சுகளை நடத்த அரசு தயாராகவுள்ளது" - என்றார்.

## பொருளாதார ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசகர் சூசன் வோல்கே ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இலங்கைக்கு அமெரிக்க அரசு தொடர்ச்சியாக வழங்கி வரும் ஆதரவைப் பாராட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்கு நன்றியும் தெரிவித்தார்.

இலங்கையில் அமைதியான சூழலை ஏற்படுத்தியதற்காக ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவித்த உதவி இராஜாங்கச் செயலாளர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சவால்களை வெற்றிகொண்டு நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமானவர் என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்த இக்கட்டான காலகட்டத்தில், இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் சகல விதமான ஆதரவையும் வழங்க எதிர்பார்ப்பதாகவும், ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கும் நாடுகளுக்கு இடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்துள்ள முயற்சிகளைப் பாராட்டுவதாகவும் டொனால்ட் லூ மேலும் தெரிவித்தார்.

## யாழ் இளைஞரின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

27 வயதுடைய இளைஞர் உறங்கி விட்டு அதிகாலையில் எழும் வேளையில் உயிரிழந்திருந்தார்.

வீடு ஒன்றின் கட்டுமானப் பணிக்காக நீர்வேலி பகுதியில் அவர் தங்கியிருந்து வேலை செய்து கொண்டிருந்தபோதே இப்படியாகியுள்ளது.

குடும்பத் தகராறு காரணமாக சில தினங்களுக்கு முன்னர் உடலில் காயங்கள் ஏற்பட்டமையால் வைத்தியசாலையில் அவர் சிகிச்சை பெற்று வந்துள்ளார் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இறப்புச் சம்பவம் தொடர்பான உடற்கூற்று பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## 6 கடற் படையினருடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலை ஏற்பட்டிருந்ததாகக் கடற்படையினர் தெரிவித்திருந்தனர்.

இப்போது அந்தப் படகில் பயணித்த 6 கடற்படையினரும் வைத்திய பரிசோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமையுடன், அவர்கள் தேகாரோக்கியத்துடன் இருக்கின்றனர் எனக் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் இந்திக டீ சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொடர்பு துண்டிக்கப்பட்ட படகில் இருந்த கடற்படையினர், செயலிழந்த கப்பலின் இயந்திரத்தைச் செயற்பாட்டுக்குக் கொண்டு வரும் நடவடிக்கையில் பல நாள்களாகப் பெரும் முயற்சி செய்த போதும் அது வெற்றியளிக்கவில்லை.

இந்த நிலையில் இலங்கை கடற்பரப்பிற்கு அப்பால் 430 கடல் மைல் தொலைவில் உள்ள சர்வதேச கடல் எல்லையில் கப்பல் சென்றுள்ளதாகவும், இதன்போது சர்வதேச கடற்பரப்பில் வர்த்தகக் கப்பல் ஒன்று இந்தக் கப்பலைக் கடந்து சென்றதாகவும், அக்கப்பலிடம் உதவி கோரி பணியாளர்கள் கூச்சலிட்ட போதிலும், அந்த கப்பலில் சென்றவர்கள் இதனை அவதானிக்கவில்லை எனவும் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதனையடுத்து குறித்த கப்பலில் இருந்த கடற்படையினரின் பெரும் முயற்சியில் கப்பலின் இயந்திரம் இந்த மாதம் 9ஆம் திகதி இயங்கத் தொடங்கியதாகவும் இதனையடுத்தே அவர்கள் பாணம கடற்படை முகாமுக்கு வந்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

## ஆறு உணவுப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் அமலுக்கு வருகிறது. அதன் விவரம் வருமாறு:-

* ஒரு கிலோ வெள்ளைப்பூண்டின் விலை 60 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ள. புதிய விலை 490 ரூபாவாகும்.
* ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 55 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலை 320 ரூபாவாகும்.
* ஒரு கிலோ நெத்தலியின் விலை 50 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலை 1,450 ரூபாவாகும்.
* ஒரு கிலோ கடலைப் பருப்புவின் விலை 30 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலை 285 ரூபாவாகும்.
* ஒரு கிலோ வெள்ளை சீனியின் விலை 15 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலை 260 ரூபாவாகும்.
* இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ வெள்ளைப் பச்சை அரிசியின் விலை 5 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலை 169 ரூபாவாகும்.

## கோட்டாவுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அழைப்பாணை அனுப்புமாறு உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிக்கு எதிரான மனுவை நேற்று விசாரித்த காமினி அமரசேகர, யசந்த கோதாகொட மற்றும் ஏ. எச். எம். டி. நவாஸ் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

மனுதாரர்சார்பில்ஆஜரானசட்டத்தரணி நுவான்போபகே, நீதிமன்றத்தில் உண்மைகளை முன்வைத்ததுடன் மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இந்த மனு அழைப்பு அறிவுறுத்தல் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனினும் கோட்டாபய ராஜபக்ஷ சார்பாக சட்டத்தரணி எவரும் நீதிமன்றில் ஆஜராகவில்லை.

இதன்படி, கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மீண்டும் அழைப்பாணை அனுப்புமாறு மனுதாரரின் சட்டத்தரணிக்கு அறிவித்த உச்ச நீதிமன்றம், மனுவை எதிர்வரும் டிசம்பர் 15ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் காணாமல் போனமை தொடர்பில் அவர்களது உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனு தொடர்பில் சாட்சியமளிக்க 2019 செப்டெம்பர் 27ஆம் திகதி ஆஜராகுமாறு அப்போதைய பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியது.

இதனையடுத்து, உயிருக்குஅச்சுறுத்தல் உள்ளதால் யாழ்.நீதிவான் நீதிமன்றத்திற்குச் சென்று சாட்சியமளிக்க முடியாது

(12ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டாவுக்கு ......

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)
எனத் தெரிவித்து எனவே, யாழ்.நீதிவானின் தீர்ப்பை இடைநிறுத்தி உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி கோட்டபாய ராஜபக்ஷ மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்தார்.

அதனை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது முடிவை அறிவித்தபோது கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தமையால் சாட்சியமளிக்க அழைக்க முடியாது என தீர்ப்பளித்தது.

இதனையடுத்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்டத்திற்கு முரணானது எனவும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இல்லாத நிலையில், தற்போது அதற்கான உத்தரவை பிறப்பிக்க வேண்டும் எனவும் கோரி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் உச்ச நீதிமன்றில் மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அந்த விசாரணைக்கே இப்போது கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அழைப்பாணை அனுப்பப்படுகின்றது.

## வயோதிபர் மீது .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
2 மணியளவில், வாள் மற்றும் கோடாரியுடன் புகுந்த இருவர் வீட்டில் இருந்த முதியவர் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். தாக்குதலுக்கு இலக்கான முதியவரின் அவல குரலை கேட்டு, அயலவர்கள் ஒன்று கூடிய வேளை தாக்குதலாளிகள் வீட்டை விட்டு தப்பியோடியுள்ளனர்.

தப்பியோடிய இருவரையும் அயலவர்கள் விரட்டிய போது, ஒருவர் அயலவர்களினால் மடக்கி பிடிக்கப்பட்டார். இருந்த போதிலும் மற்றையவர் தப்பியோடியுள்ளார். அயலவர்களால் மடக்கி பிடிக்கப்பட்டவர் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் தேவமயில் முருகவேள் (வயது 65) எனும் முதியவரே படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் ஊறணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## 2 கோடி ரூபா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாவட்ட குற்ற தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

மன்னார் மாவட்ட குற்றதடுப்பு பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பிரகாரம் புத்தளம் நுரைச்சோலை பகுதிக்கு கடந்த திங்கட்கிழமை தேடுதல் நடவடிக்கைக்காக சென்றிருந்த மன்னார் மாவட்டக் குற்றத்தடுப்பு பிரிவினர் சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான கொக்கேயின் போதை பொருளை மீட்டனர்.

1 கிலோ 26 கிராம் கொக்கேயின் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் புத்தளம் மற்றும் கல்பிட்டியினை சேர்ந்த 25, 26, 34, 36, 53 வயதுடைய 5 சந்தேகங்களையும் கைது செய்தனர்.

அவர்களிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணையில் நானாட்டான பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள அருகண்குண்டு பகுதியினைச் சேர்ந்த 48 வயதுடைய ஒருவரின் வீட்டில் இருந்து கொக்கேயின் வகை போதைப்பொருள் 506 கிராம் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதானோரை மன்னார் மாவட்ட நீதிமன்றில் கொக்கேயின் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@ gmail.com

## வவுனியாவில் .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்றுக் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு வாசகங்களை தாங்கிய பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இதில் ஐம்ப துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.








## நிமலராஜனின் நினைவேந்தல் .............







(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைப்பின் தலைவர் மு.கோமகன் சுடரேற்றியதை தொடர்ந்து, ஊடகவியலாளர்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

போர் சூழலில் யாழில் இருந்து , துணிவாக ஊடகப்பணியாற்றியவர் மயில்வாகனம் நிமலராஜன். பி.பி.சி.யின் தமிழ் மற்றும் சிங்கள சேவை , வீரகேசரி , ராவய போன்ற ஊடகங்களில் பணியாற்றி இருந்தார்.

கடந்த 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த வேளை இவரது வீட்டு வளவினுள் புகுந்த ஆயுததாரிகள், வீட்டின் ஜன்னல் ஊடாக அவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

அதன் போது அவர் எழுதிக்கொண்டு இருந்த கட்டுரை மீது வீழ்ந்தேஉயிர்துறந்தார்.

கொலையாளிகள் துப்பாக்கி பிரயோகம் மேற் கொண்டு நிமலராஜனை படுகொலை செய்த பின்னர், வீட்டின் மீது கைக் குண்டு தாக்குதலையும்மேற்கொண்டனர். அதன் போது வீட்டில் இருந்த நிலம ராஜனின் தந்தை சங்கரப்பிள்ளைமயில்வாகனம், தாய் லில்லி மயில்வாகனம் மற்றும் மருமகன் ஜெக தாஸ் பிரசன்னா ஆகியோர் படுகாயமடைந்தனர்.



# போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு யாழில் புனர்வாழ்வு நிலையம் அமைக்க முயற்சி!

## யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் தெரிவிப்பு



வட பகுதியில் போதைக்கு அடிமையானவர்களை புனர் வாழ்வளிப்பதற்கு யாழ். நகருக்கு அண்மையில் புனர்வாழ்வு நிலையம் அமைக்க முயற்சி மேற்கொண்டு வருவதாக யாழ்ப்பாண மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

பப்ரல் அமைப்பின் மாற்றத்துக்கான பாதை கற்கை நெறியின் யாழ்.மாவட்ட பெண்கள் குழு நடத்தும் போதையால் பாதை மாறும் இளையோரை நல்வழிப் படுத்தி நற்பிஜைகளாக உருவாக்குவோம் எனும் தொனிப் பொருளிலான போதை ஒழிப்பு விழிப்புணர்வு செயற்பாட்டு நிகழ்வு திருநெல்வேலி முத்து தம்பி இந்து மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த விழிப்புணர்வு செயற்பாட்டில் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாநகர முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

எங்களுடைய பிரதேச மானமானது அச்சுறுத்தலையும் ஆபத்தையும் எதிர்நோக்கிக் கொண்டி ருக்கின்றது.

அண்மையில் வெளிவரும் பத்திரிகை செய்திகள் அனைவரையும் கவலைக்கு உள்ளாக்குகின்ற கலக்கத்தை உண்டாக்குகின்ற பயங்கரமான செய்திகளை அண்மைக் காலங்களில் பத்திரிகைகளில் படித்துக் கொண்டிருக்கின்றோம்.

ஒவ்வொரு பெற்றோரும் தங்களுடைய பிள்ளைகள் எவ்வாறு பாதிக்கப்படப் போகின்றார்கள் என்கின்ற அச்சத்தில் தங்களுடைய வாழ்நாளை கழிக்கின்ற ஓர் அவல நிலைமை தற்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சமூகத்தில் இருக்கக்கூடிய பெரியவர்களால் முன்வைக்கப்படுகின்றது. அதாவது போதை பொருள் வர்த்தகர்களின் பிரதான இலக்காக பாதிக்கப்படுபவராக இருப்பவர்கள் பாடசாலை மாணவர்களாகத்தான் இருக்கின்றார்கள்.

இந்தப் பாடசாலை மாணவ மாணவிகளை இலக்குவைத்து இவ்வாறான போதைப் பொருள் விநியோகம் அண்மைக் காலங்களிலே அதிகரிக்கப்பட்டு வருகின்றன.

எதிர்கால சந்ததி எனக் கருதப்படுகின்ற எங்களுடைய இளைஞர்கள், யுவதிகளை நோக்கி போதை பொருள் வர்த்தகம் மிக வேகமாக நடைபெற்று வருகின்றது. அதற்குள்ளே அறிந்தும் அறியாமலும் அதனுடைய எதிர்கால விளைவுகளை பற்றித் தெரியாது எமது இளைஞர், யுவதிகள் இந்த போதைப் பொருளுக்குள்ளே அடிமையாகிக் கொண்டிருக்கின்றமை இந்த மண்ணிலே நிகழ்ந்து கொண்டி ருக்கின்றது.

இதனைத் தடுத்துநிறுத்த வேண்டிய பாரிய கடப்பாடு ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது. அதிலும் விசேடமாக அரசியல் தலைமைகள், சமூகமட்ட பிரதிநிதிகள் அதோடு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மற்றும் கல்வி சமூகம் அனைவரதும் கடமையாகும்.

எதிர்காலத்தில் இந்தப் போதைப் பொருள் பாவனைக்குள் உள்ளாகாதவாறு மாணவர்களை எவ்வாறு பாதுகாப்பது தொடர்பில் நாங்கள் விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யாழ். மாநகர முதல்வர் என்ற ரீதியில் எதிர்காலத்தில் எவ்வாறான செயற்பாட்டை எவ்வாறு முன்னெடுப்பது தொடர்பில் அனைத்துத் தரப்பினருடனும் போதைப் பொருளுக்கு எதிரான செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு அனைத்து தரப்பினரையும் ஒருங்கிணைத்து விசேட கூட்டம் ஒன்றினைத்து விரைவில் அந்த செயற்பாட்டை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளேன். பல்கலைக்கழக மாணவர்கள், கல்வி சமூகத்தினர் மற்றும் பொலிஸார் ஆகிய அனைத்து தரப்பினரை ஒன்றிணைத்து எவ்வாறு இந்த போதைப் பொருள்களில் இருந்து எமது மாணவ சமூகத்தைக் காப்பாற்ற முடியும் என்ற விடயத்தை அறிந்து அதனைச் செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கை விரைவில் முன்னெடுக்க உள்ளோம்.

அத்தோடு போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கக் கூடிய விசேட நிலையம் ஒன்றை யாழ்.நகருக்கு அண்மையில் அமைப்பதற்கு யோசித்து வருகின்றோம். போதைப் பொருளுக்கு அடிமையானவர்களைச் சிறைச்சாலைக்கு அனுப்புவதன் மூலம் அவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின் றார்கள். ஆகவே, போதைப் பொருளுக்கு அடிமையானவர்களைப் புனர்வாழ்வுக்கு அனுப்புவதன் மூலம் அவர்களை சமூகத்தோடு ஒருங்கிணைக்க முடியும்.

எனவே, வடக்கில் யாழ்.நகருக்கு அண்மையில் ஓர் இடத்தில் புனர்வாழ்வு நிலையம் ஒன்றை அமைப்பதற்கும் நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். அதற்குரிய முயற்சியை எடுத்து வருகின்றேன். அனைவரின் ஒத்துழைப்புடன் அந்த விடயம் விரைவில் கைகூடும் எனவும் தெரிவித்தார்.

# சீரடி சாயிபாபா நடை பவனி





கொழும்பு கொட்டாஞ் சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய சாயி நாதனின் சரணாலய அறங்காவலர் ஏற்பாட்டில் சீரடி சாயிபாபாவின் திருவுருவ நடை பவனி நேற்றுக் காலை பம்பலப்பிட்டி வஜிரா வீதி பழைய கதிரேசன் விநாயகர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி காலி வீதி வழியாக கொட்டாஞ்சேனை சாயி நாதனின் சரணாயலம் நோக்கி செல்கையில் பிடிக்கப்பட்ட படங்களை காணலாம்.

# ஒரு தலைவருக்கு ஆனது அல்ல எனது அன்பு இலங்கைக்கானது என்கின்றார் சொல்ஹெய்ம்!



எனது அன்பு ஒரு தலைவருக்கானது இல்லை பூமியின் மிகவும் அழகான தீவான இலங்கை தேசத்துக்கானது என நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் சமாதான தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் தெரிவி;த்துள்ளார்.

முதலாவதாக பல வருட சமாதான பேச்சுகளின் மூலமாக நான் ரணில் விக்கிரமசிங்கவுடன் நெருக்கமாக உறவை வளர்த்துக்கொண்டேன். ஆனால் பலர் கருதுவதற்கு மாறாக ஏனைய இலங்கை அரசியல் வாதிகள் பலருடன் எனக்கு சிறந்த உறவு உள்ளது.

நான் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித் தேன். பரஸ்பரம் இருவரும் ஆரத்தழுவிக்கொண்டோம்.

சம்பந்தன், சுமந்திரன் போன்ற பல தமிழ்த் தலைவர்களை எனக்கு தெரியும்,

ஆகவே எனது அன்பு ஒரு தலைவருக்கானது அல்ல, பூமியின் மிகவும் அழகான தீவான இலங்கை தேசத்துக்கானது .

என்னால் உதவிவழங்க முடியுமா என ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார் என்னையும் மாலைதீவின் முகமட் நசீட்டையும் அவர் கேட்டுக்கொண்டார் என எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

# வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள நடமாடும் சேவையில் பயன் பெறுமாறு கோரிக்கை!

## தனியார் பஸ் உரிமையாளர்களை அழைக்கிறார் அதன் தலைவர்



வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் 22ஆம் மற்றும் 23ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் கைதடியில் இடம்பெறவுள்ள நடமாடும் சேவையில் வடக்கு மாகாணத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களின் உரிமையாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபை உறுப்பினரும், வடமாகாண தனியார் பஸ் சங்கத்தின் தலைவருமான சி.சிவபரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

நீண்ட காலமாக வடக்கு மாகாணத்தில் சேவையில் ஈடுபட்டு வரும் பஸ்களுக்கான வருடாந்த வருமான வரி பத்திரத்தைப் பெறுவதில் பெரும் இடர்பாடுகளை அதன் உரிமையாளர்கள் எதிர்நோக்கி வருகின்றார்கள்.

எனவே அந்த இடர்பாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக நீண்ட காலமாக நமது சங்கத்தினரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினரின் ஏற்பாட்டில் மாபெரும் நடமாடும் சேவை எதிர்வரும் 22 ஆம் மற்றும் 23 ஆம் திகதிகளில் கைதடியில் இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் கொழும்பில் சென்று மேற்கொள்ள வேண்டிய அனைத்து செயற்பாடுகளையும் இங்கே ஒரே நாளில் ஓரிடத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பஸ் உரிமையாளர்களும் தங்களுடைய ஆவணங்கள் அனைத்தையும் கொண்டு வந்து நடமாடும் சேவையில் தங்களுக்குரிய சேவையினை பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

# அத்தியாவசிய சேவைகள் விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## எரிசக்தி அமைச்சர் காஞ்சன எச்சரிக்கை



அத்தியாவசிய சேவை விதிமுறைகளை மீறும் எந்தவொரு ஊழியர் அல்லது தொழிற் சங்கத்துக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித் துள்ளார்.

பெற்றோலிய சேவைகள் ஆறு மாதங்களுக்கு முன்பே அத்தியாவசியமானதாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முழுமையான தடயவியல் தணிக்கைக்கு எதிராக பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க பல பெற்றோலிய தொழிற்சங்கங்கள் தீர்மானித் துள்ளன.

எனவே, சேவையில் ஏற்படும் இடையூறுகளுக்கு உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க அறிவுறுத்திய அமைச்சர், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித் துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.10.2022இல் வெளியிடப்பெற்றது.